பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 29 வெள்ளிக்கிழமை 15.11.2024 கதிர் 008

## நாணய நிதியத்தின் பயணம் தேர்தலையொட்டி ஒத்திவைப்பு

நாடாளுமன்றதேர்தல்தினத்தன்றுஇலங்கைக்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொள்ளவிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட குழு, தமது பயணத்தை ஒத்திவைத்துள்ளது.

இலங்கையில்பொதுத்தேர்தல்இடம்பெறுவதால் நாளையே தமது குழுவின் பயணம் இடம்பெறும் என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இலங்கையின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் மூன்றாவது மீளாய்வைப் பற்றி கலந்துரையாடல்களை நடத்த ☞2

## இதுவரையான அரசியல் வரைபடத்தை தேசிய மக்கள் சக்தி மாற்றியமைக்கும்

### வடக்கையும் தெற்கையும் ஒன்றிணைக்கும் என்கிறார் அநுர

கடந்த காலத்தில் அரசியல் வரைபடம் வேறாக இருந்தது. வடக்கிற்கு ஒன்றாகவும், தெற்கிற்கு வேறாகவும் இருந்தது. தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கை ஒன்றிணைக்கும் ஆட்சியை அமைக்கும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்ததார்.

மருதானை பஞ்சிகாவத்தை அபயசிங்காராமவில் தனது வாக்கினைப் பதிவு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தேசியமக்கள்சக்திஅமைதியானதேர்தல் பரப்புரையை உறுதி செய்துள்ளது, இது எதிர்கால தேர்தல்களின் தராதரத்திற்கான உதாரணமாக அமையும். இந்த நாடாளுமன்றத் தேர்தல் தீர்மானம் மிக்கதும் திருப்பு முனையாகவும் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

வடக்குத் தமிழ் மக்கள் தமது தேர்தல் அணுகுமுறையில் கடந்த பல தசாப்தங்களில் மிகப்பெரிய மாற்றத்தைக் காட்டியுள்ளனர். போருக்குப் பின்னரான கடந்த 15 வருட காலங்களில் நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் இலங்கையின் ஏனைய பகுதிகள் வாக்களிக்கும்போக்குக்கு நேர்மாறாக வாக்களித்து தாம் வேறானவர்கள் என்று காட்டி வந்த வடக்கு, கிழக்கு மக்கள்இந்தமுறைஅதில்மாற்றத்தைக் காட்டி, இலங்கை முழுவதற்கும் ஒரே நிறம் தீட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டங்களில் தமிழ்க் கட்சிகளுக்குப் பேரதிர்ச்சியைத் தரும் வகையில் மக்களின் முடிவு அமைந்திருக்கின்றது. கட்சிகள் பலவாகப் பிளவுண்டதுபோக, கட்சிகளுக்குள்ளேயே பலவாறாகப் போட்டி, பொறாமையோடு வேட்பாளர்கள் பிளவுண்டதும் ☞2

## வடக்கு உட்பட நாடு முழுவதும்

# தேசிய மக்கள் சக்தி மாபெரும் வெற்றி

### மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கைப்பற்ற வாய்ப்பு



**2024 பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திஅதிகூடியஆசனங்களைக் கைப்பற்றி பெரும் வெற்றி வாகை சூடியுள்ளது. அண்மைக் கால வரலாற்றில் முதற்றடவையாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாகாணத்திலும் அந்தக் கட்சியே வெற்றி பெற்றுள்ளமை அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.** ☞2

## புதிய பரம்பரையின் அரசியல் ஆரம்பம்

### பொதுத் தேர்தலை வர்ணித்த நாமல்

இந்தப் பொதுத் தேர்தல் பொது ஜன பெரமுனவின் புதிய பரம்பரையின் அரசியல் ஆரம்பம் என்று பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

தங்காலை மெதமுலன டி.ஏ.ரஜபக்ச தேசிய பாடசாலையில் நேற்று வாக்களித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சிஎன்றவகையில்நாம்சிறந்ததயார் நிலையில் இருக்கின்றோம். ஜனாதிபதி தேர்தலின் பின்னர் இந்தத் தேர்தலுக்கு ஐந்து வாரங்களே இருந்தன. எனவே கட்சி என்ற வகையில் நாம் சிறந்த நிலையில் இருக்கின்றோம் என்றே நம்புகின்றோம்.

இந்தப் பொதுத் தேர்தல் ஏனைய தேர்தல் வெற்றிகளுக்கான ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் ஆரம்பம் என்றே கருதுகின்றோம். அத்துடன் புதிய பரம்பரையின் அரசியல் ஆரம்பமாகவே இதனைக் காண்கின்றோம் என்றார்.

## இன்னும் ஒரு வாரத்திற்கு தேர்தல் சட்டம் அமுலில்

இன்னும் ஒரு வாரகாலத்துக்குத் தேர்தல்சட்டம்கடுமையாகநடைமுறையில் இருக்கும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கொழும்பில்நேற்றுமாலைஇடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

## மக்களுக்குத் தேர்தல்களில் ஆர்வம் குறைந்து விட்டது

### ரணில் விக்கிரமசிங்க கவலை

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மக்களுக்கு தேர்தல்களில் ஆர்வம் குறைந்துள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் நேற்று வாக்களித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மக்கள் தேர்தலில் பங்கேற்பதில் ஆர்வம்குறைந்துள்ளமையைக்காண முடிகின்றது. ஒவ்வொரு இடங்களில் இருந்து கிடைக்கும் அறிக்கைகளைப் பார்க்கின்றபோது மக்கள் வாக்களிப்பில் ஆர்வம் காண்பிக்கவில்லை என்பது தெரிகின்றது,

சிலவேளைகளில் வேட்பாளர்கள் யார் என்பதும் தெரியாதுள்ளது. ஆகவே எவ்விதமான முடிவுகள் வரும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். வாக்களிப்புவீதம்குறைவாக இருப்பதன் காரணத்தால் எவ்விதமான முடிவுகள் வரும் என்பது தெரியாது. பொறுத்திருக்கவே வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில் நான் தொங்கு பாலத்தில் குழந்தையை கொண்டுவந்தேன். ☞2

## பலமான எதிர்க்கட்சி இருப்பது நாட்டுக்கே நன்மை பயக்கும்

### பிரதமர் ஹரினி தெரிவிப்பு

சிறந்த மற்றும் பலமான எதிர்க்கட்சி இருப்பது நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று பிரதமர் ☞2



## யார் ஆட்சிக்கு வந்தாலும் காத்திருக்கின்றது சவால்

### மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

2024 பொதுத் தேர்தலில் வென்றுயார்ஆட்சிக்குவந்தாலும் அவர்களுக்கு நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பெரும் சவால்கள் இருக்கின்றன என்று முன்னாள் ஜனாதிபதியும், பொது ஜனபெரமுனவின்தலைவருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

தங்காலை மெதமுலன டி.ஏ.ராஜபக்சதேசியபாடசாலையில் நேற்று வாக்களித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

"நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பதைக் காண்கின்றோம். சிறந்த பெறுபேறு கிடைக்கும் என்றே எதிர்பார்க்கின்றோம். ஆட்சிக்கு வருவது யாராக இருந்தாலும் நாட்டைக் கட்டியெழுப்புவதில் பெரும் சவால்கள் உள்ளன. அந்தச்சவால்களைவென்றெடுத்து முன்னோக்கிச்செல்லவேண்டும்" என்றார். ☞8

## ஆளும்தரப்பின் பாதகமான முடிவுகளுக்கு இடமளியோம்

### சிறிசேன கருத்து

ஆளும் தரப்பின் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். மாறாக மக்களுக்கு பாதகமான நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலன்னறுவையில் நேற்றையதினம் தேர்தலில் வாக்களித்தன் பின்னர் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சர்வஜனபலயகட்சிக்கு ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தமிழ்மக்களுக்குவிரக்தியைஏற்படுத்தியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தவர்களில் சுமார் 30 ஆயிரம் பேர் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் வேட்பாளரான அரியநேத்திரன் வெற்றிபெற்ற தொகுதிகளில்கூட இம்முறை தேசிய மக்கள் சக்தியே வெற்றிபெற்றுள்ளது. அதேபோன்று தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய முன்னணியின் பலமிக்க கோட்டைகள் என்று கருதப்பட்ட பருத்தித்துறை, உடுத்துறை, காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை போன்ற தொகுதிகளையும் தேசிய மக்கள் சக்தியே கைப்பற்றி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுகாலம் வரையும் ஆளும் தரப்புகளின் முகவர்களாக வடக்கில் இருந்துவந்த ஈபிடிபியின் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் ஆகியோர் இந்தத் தேர்தலில் காணாமல் போயுள்ளார்கள். திடீர் கிளர்ச்சியாளராகத் தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட மருத்துவர் அருச்சுணா, சுயேச்சைக் குழு ஒன்று நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்கிற சரித்திரத்தை மாற்றி எழுதியுள்ளார்.

இலங்கையின் புதிய அலைக்குள் தமிழ் மக்களும் அள்ளுண்டு தேசிய நீரோட்டத்தில் இணைந்திருப்பது தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் புதிய ஓர் சூழலைத் தோற்றுவித்துள்ளது. இன்றைய கால கட்டத்தில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு, தேவை என்பவற்றின் அடிப்படையில் தமிழ்க் கட்சிகள் தமது அரசியலை மீள்வடிவமைப்புச் செய்யவேண்டிய நிலைக்குநிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இனிமேல் தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம், அரசியல் கைதிகள், காணி விடுவிப்பு, நீதி, நியாயம் என்கிற பழைய பல்லவிகள் மட்டுமே தமிழர்களின் அரசியலுக்குப் போதுமானதல்ல என்கிற படிப்பினையை இந்தத் தேர்தல் நன்கு கற்றுக்கொடுத்துள்ளது. அரசியல் தலைவர்கள் பாடம் படிக்கிறார்களா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

தமிழ் அரசுக் கட்சி இந்தத் தேர்தலில் கடுமையான பின்னடைவுகளைச் சந்தித்தபோதும் வடக்குக் கிழக்கில் அந்தக் கட்சி 7க்கும் குறையாத ஆசனங்களைக் கைப்பற்றுவது உறுதியாகி உள்ளது. இதன் மூ-லம் வடக்குக் கிழக்கில் உள்ள ஒரேயொரு பெரிய தமிழ்க் கட்சி என்கிற தனது இடத்தை அந்தக் கட்சி தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

ஆனாலும் அந்தக் கட்சிக்குள் சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையில் ஏற்பட்ட பிளவும் சண்டைகளும் அந்தக் கட்சியையே யாழ்ப்பாணத்தில் முழுமையாக மூழ்கடித்துவிட்டது. இப்படி யாழ்ப்பாணத்தில் ஒரேயொரு ஆசனத்தை மட்டுமே தனது கட்சி வென்று தான் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினர் ஆவதன் மூலமே தமிழ் அரசுக் கட்சியை சுமந்திரனிடம் இருந்து மீட்கமுடியும் என்பது சிறீதரனின் தேர்தல் பரப்புரையின் உட்பொருளாக இருந்தது. பல இடங்களிலும் அதனை அவர் வெளிப்படையாகவும் கூறியிருந்தார்.

அப்படித் தான் மட்டுமே வெற்றிபெற்றால் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவி தனது கைகளுக்குக் கிடைக்கும் என்று அவர் எண்ணினார். அவர் நினைத்தது நடந்தது. யாழ்ப்பாணத்தில் அவர் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றிபெறும் நிலையில், அவரால் கட்சியையும் அதன் தலைமையையும் கைப்பற்ற முடியுமா என்பது பெரும் கேள்விதான். ஏனெனில் தமிழ் அரசுக் கட்சி வென்றிருக்கக்கூடிய 7 ஆசனங்களில் குறைந்தபட்சம் அரைவாசிக்கும் அதிகமானவை சுமந்திரனின் ஆதரவாளர்களாலேயே நிரப்பப்பட்டுள்ளன. அதிலும் மட்டக்களப்பில் சுமந்திரனின் நெருங்கிய சகாவாக அறியப்படும் சாணக்கியனின் பேரெழுச்சி கட்சிக்குள் சிறீதரனுக்கான கடும் சவாலாகவே இருக்கும். எனவே அவர் நினைத்த மாதிரி இந்தத் தேர்தல் வெற்றி அவருக்கு கட்சி நிலமைகளை இலகுவாக்கிக் கொடுக்காது என்பது திண்ணம்.

நந்தவனத்திலோர் ஆண்டி நாலாறு மாதமாய் குயவனை வேண்டி, கொண்டு வந்தான் ஒரு தோண்டி, அதைக் கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தாண்டி என்கிற கதையாக முடிந்துவிட்டது யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசுக் கட்சியின் நிலை.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் மீதான வெறுப்பும் விரக்தியும் வடக்குத் தமிழர்களை தேசிய மக்கள் சக்தியின் பக்கம் இப்போதைக்கு சாய வைத்தாலும், அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலுக்குள் அவர்களுக்கு அந்தக் கட்சியும் சலித்துப்போய் தமிழ்த் தேசியத்தின் பக்கம் அவர்கள் நிச்சயம் திரும்பு நிலைவரும். அதற்கிடையில் தமிழ்க் கட்சிகள் தங்களை மறுசீரமைத்து தயாராகிறார்களா என்று பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேசிய ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10ஆவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் வாக்களிப்பு நேற்று காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெற்றது. குறிப்பிடப்படும்படியான வன்முறைகள் ஏதுமின்றி வாக்களிப்பு நடந்து முடிந்தது.

மாலை 4 மணிக்கு வாக்குகளை எண்ணும் பணி தொடங்கியது. முதலில் தபால் மூல வாக்குகள் எண்ணப்பட்டன. அதன் முதல் முடிவு இரவு 9.30 மணியளவில் வெளியிடப்பட்டது. அதிகாலை வரை வெளியிடப்பட்ட முடிவுகளின்படி தேசிய மக்கள் சக்தி பெரும்பாலான ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றது. செல்லுபடியான வாக்குகளில் சுமார் 70 சதவீத வாக்குகளை அந்தக் கட்சி சுவீகரித்துள்ளது.

வரலாற்றில் முதற்றடவையாக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றத்தைத் தொடர்ந்து தற்போது நாடாளுமன்றத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி பெரு வெற்றியைப் பெற்றுள்ளது. இதன் மூலம் பலமான ஆளும் தரப்பு ஒன்றை அமைப்பதற்கான வாய்ப்பையும் பெற்றுள்ளது.

அதிகாலைவரையில் வெளியான உத்தியோகபூர்வ முடிவுகளின்படி வடக்கில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் மற்றும் சாவகச்சேரி, ஊர்காவற்றுறை தொகுதிகள் தவிர்த்து ஏனைய இடங்களில் தேசிய மக்கள் சக்தியே வெற்றிபெற்றுள்ளது. சாவகச்சேரி தொகுதியில் ஊசி சின்னத்தில் போட்டியிட்ட மருத்துவர் அருச்சுனாவின் சுயேச்சைக் குழுவும் ஊர்காவற்றுறை தொகுதியில் ஈபிடிபியும் வெற்றி பெற்றுள்ளன. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு தொகுதிகளில் தமிழ் அரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

உடுத்துறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, நல்லூர் ஆகிய தொகுதிகளில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றுள்ளது. வன்னி தேர்தல் மாவட்டத்தில் அந்தக் கட்சி இரண்டு ஆசனங்களை வென்றுள்ளது. தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, ரிஷாத் பதியுதீன், மற்றும் காதர் மஸ்தான் ஆகிய தரப்புக்கள் தலா ஒரு ஆசனத்தை வென்றுள்ளன. வன்னி மாவட்டத்தின் வவுனியாத் தொகுதியில் தேசிய மக்கள் சக்தியும் முல்லைத்தீவு தொகுதியில் தமிழ் அரசுக்கட்சியும் மன்னாரில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் வெற்றிபெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு இரண்டு ஆசனங்கள் கிடைப்பது உறுதியாகியுள்ளது. மூன்றாவது ஆசனம் கிடைக்குமா என்கிற கேள்வியும் எழுந்துள்ளது. தமிழ் அரசுக் கட்சி, தேசிய மக்கள் முன்னணி, மருத்துவர் அருச்சுனாவின் சுயேச்சைக் குழு ஆகியன தலா ஒரு ஆசனத்தைக் கைப்பற்றும் நிலை இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் சேருவில, திருகோணமலை ஆகிய தொகுதிகளில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றது. மூதூர் தொகுதியில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிபெற்றுள்ளது. அந்த மாவட்டத்தில் தேசிய மக்கள் கட்சி 2 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் அரசுக் கட்சி ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி தனது ஆதிக்கத்தைத் தக்கவைத்துள்ளது. அங்கு உத்தியோகபூர்வமான தொகுதி முடிவுகள் அறிவிக்கப்படாத நிலையிலும் தமிழ் அரசுக் கட்சி 3 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன. என்று தெரிகிறது. அம்பாறை மாவட்டத்தில் ஏனைய தமிழ்க் கட்சிகளைவிட பெருவாரியான வித்தியாசத்தில் தமிழ் அரசுக் கட்சி வாக்குகளைப் பெற்றுள்ளது.

வாக்குகள் எண்ணும் பணிகள் நிறைவடைந்து மாவட்ட ரீதியான உத்தியோக பூர்வ முடிவுகள் வெளியிடப்பட்டுவரும் நிலையில், அதிகாலை முதல் விருப்பு வாக்குகளை எண்ணும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

## மக்களுக்குத்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது நானே தொங்குபாலத்தினை சரிவடையச் செய்வதாகக் கூறுகின்றார்கள். ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. பத்திரமாக குழந்தையை இந்தக் கரைக்குக் கொண்டுவாருங்கள் என்றுதான் கூறுகின்றேன். அதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை அமுலாக்குமாறு வலியுறுத்துகின்றேன்.

இதேநேரம், 'எல்' போர்ட் ஆளும்தரப்பு ஒன்று இருக்கும்போது நாடாளுமன்றமும் அவ்வாறு ஆகிவிடக்கூடாது என்பதே என்னுடைய நிலைப்பாடாக இருந்தது. அதற்காகவே நாடாளுமன்றத்தில் அனுபவசாலிகள் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன் என்றார்.

## பலமான....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு - மிரிஹானவில் நேற்று வாக்களித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமக்கு பதவி முக்கியமல்ல, பலமான நாடாளுமன்றத்தை அமைப்பதையே எதிரர்பார்த்துள்ளோம். பெரும்பான்மை பலம் எமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை முழுமையாக உள்ளது. பதவிகள் தொடர்பில் எமது அணிக்குள் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது.

10ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நவம்பர் 21 கூடும். ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் முன்வைத்த கொள்கைத் திட்டத்தை சிறந்த முறையில் செயற்படுத்துவோம். உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

புதியவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புமாறு நாங்கள் குறிப்பிடும் போது எதிர் தரப்பினர் பழையவர்களை நாடாளுமன் றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். பழையவர்கள் நாட்டுக்கு என்ன செய்தார்கள் என்பதை ஆராய வேண்டும்.

அத்துடன் அனுபவமில்லாதவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பக்கூடாது என்று குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது. அரச நிதியை மோசடி செய்த அனுபவமும், நாடாளுமன்றத்தில் முறையற்ற வகையில் செயற்பட்ட அனுபவமும் எமக்குக் கிடையாது.

ஆளும் தரப்புக்கு புதியவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதைப் போன்று எதிர்க்கட்சிக்கும் புதியவர்களைத் தெரிவுசெய்யவேண்டும். சிறந்த மற்றும் பலமான எதிர்க்கட்சி இருப்பது நாட்டுக்கு நன்மை பயக்கும் என்றார்.

## ஆளும்தரப்பின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடளாவிய ரீதியில் சிறந்த வரவேற்பிருக்கிறது. எனவே இந்த தேர்தலில் சிறந்த வெற்றியை எதிர்பார்க்கின்றோம். ஆளும்தரப்பின் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவோம். மாறாக மக்களுக்கு பாதகமான நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது. நான் அரசியலிலிருந்து ஓய்வு பெறவில்லை. நினைத்தால் அடுத்த தேர்தலில் போட்டியிடுவேன் என்றார்.

இதேவேளை, சர்வஜன பலய கட்சியின் பொலன்னறுவை மாவட்ட வேட்பாளர் தஹம் சிறிசேன தெரிவிக்கையில், குறுகிய காலத்துக்குள் எமது கட்சி மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. நாட்டில் பெரும்பாலான மக்களுக்கு ஆளும்தரப்பின் மீது நம்பிக்கை இல்லாது போயுள்ளது. எனவே எதிர்க்கட்சிக்கான பொறுப்புக்களை எம்மால் சிறந்த முறையில் நிறைவேற்ற முடியும் என்றார்.

## இன்னும்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத் தேர்தலில் 70 ஆயிரம் வரையான பொலிஸாரும் 20 ஆயிரம் வரையிலான முப்படையினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**பிரசாரங்களுக்கு தடை**

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் ஒரு வாரகாலத்திற்கு ஆர்ப்பாட்டங்கள் பேரணிகளில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வெற்றிக்கொண்டாடங்களை செய்பவர்கள் பொதுமக்களின் பிரசன்னத்துக்கு இடையூறுவிளைவிக்கும் வகையிலோ அல்லது முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையிலோ செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடாது. அதற்காக தீவிரமான கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள வாக்கு எண்ணும் நிலையங்களின் பாதுகாப்பு கடுமையாக பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், முழுமையாக இந்தப் பணி முடியும்வரை பாதுகாப்பு பேணப்படும். அதேபோன்று எதிர்வரும் ஒரு வாரகாலத்துக்கு தேர்தல் சட்டம் கடுமையாக அமுலில் இருக்கும்

**வன்முறைகள் இல்லை**

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் அமைதியான மற்றும் சுமூகமான முறையில் இடம்பெற்றது. எவ்வாறாயினும், தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் நீர்கொழும்பு, கேகாலை, சீதாவாக்க, கொழும்பு வடக்கு, களுத்துறை, களனி, தெல்தானிய, மாத்தறை மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இந்தச்சம்பவங்களைத்தவிர, வன்முறைச் சம்பவங்கள் எதுவும் நேற்று மாலை 4 மணிக்கு வாக்களிப்பு முடியும்வரை பதிவாகவில்லை. தேர்தல் அமைதியான முறையிலேயே நடைபெற்றது.

தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மூவர் இயற்கையாக உயிரிழந்திருக்கின்றனர். இவர்களது இறப்புகளுக்கு இருதய கோளாறுகள் காரணம் என்று வைத்தியசாலை வட்டாரங்களில் அறிய முடிந்தது.

**ஊரடங்கு அறிவிப்பு**

தேர்தல் முடிவுகள் வெளியாகும் வரையில் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டம் அமுலாகுமா இல்லையா என்பதை உறுதியாகக் கூறமுடியாது. அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஜனாதிபதியே அதனைத் தீர்மானிக்க வேண்டும்.

இதுவரையில் ஊரடங்குக்கான எந்தவொரு அறிவிப்பும் பொலிஸாருக்கு கிடைக்கவில்லை. அமைதியான முறையில் தேர்தல் செயற்பாடுகள் இடம்பெறுவதால் ஊரடங்குச் சட்டம் தொடர்பில் ஆளும்தரப்பு எவ்வாறான தீர்மானம் எடுக்குமென்பதைக் கூறமுடியாது. எனவே, அப்படியொரு தீர்மானத்தை அறிவிக்கப்பட்டால் பொதுமக்களுக்கு உடனடியாக அறிவிக்க நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## இதுவரையான ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமையும் தேர்தலாகும். தேசிய மக்கள் சக்தி வலுவான நாடாளுமன்றத்தை அமைக்கும் என்றும் நம்பிக்கை உள்ளது. மக்களுக்கு ஏற்புடையதான சட்டங்களை நிறைவேற்றி, புதிய நாடாளுமன்ற கலாசாரத்தை உருவாக்க முடியும்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் நாட்டில் காணப்பட்ட ஜனநாயக ரீதியிலான சுதந்திரத்தை இனிவரும் தேர்தல் காலங்களிலும் மக்கள் எதிர்பார்க்கின்றனர், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மக்கள் அதை உணர்ந்துள்ளனர். அதனையே இந்நாட்டின் தேர்தல் கலாசாரமாக மாற்ற எதிர்பார்க்கின்றனர்.

நாம் வடக்கு மக்களிடத்தில் பல்வேறு விடயங்களை கூறியுள்ளோம். அவர்களிடத்திலிருந்தும் பல்வேறு விடயங்களை எதிர்பார்க்கின்றோம். கடந்த காலத்தில் அரசியல் வரைபடம் வேறாக இருந்தது. வடக்கிற்கு ஒன்றாகவும், தெற்கிற்கு வேறாகவும் இருந்தது. தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கை ஒன்றிணைக்கும் ஆட்சியை அமைக்கும் - என்றார்.

## நாணய...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று நவம்பர் 14 இலங்கைக்கு வருவதாகத் தெரியப்படுத்தியிருந்தது. இப்போது அது இரு நாள்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசன், தலைமையிலான குழு ஒக்டோபர்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு, கிழக்கு சிறுபான்மை மக்களுக்கு சிறந்த ஓர் எதிர்காலம் பெற்றுதருவோம்

## சாணக்கியன் நம்பிக்கை



மக்கள் எங்களுடைய கரங்களை பலப்படுத்தினால் மட்டக்களப்பு மாவட்ட

மக்களுக்கும் வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கும் சிறந்த ஓர் எதிர்காலத்தை எம்மால் அமைத்து தர முடியும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பட்டிருப்பு( களுவாஞ்சிகுடி) தேசிய பாடசாலையில் வாக்களித்து விட்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் எனது வாக்கை எனக்காக செலுத்தி இருக்கின்றேன். என்னுடைய வாக்கு எதிர்வருகின்ற ஐந்துவருடத்தில்எமதுமக்களின்தலைமைத்துவத்தை தீர்மானிக்கின்ற வாக்காக நான் இதனைப் பார்க்கிறேன். அதனை நான் உரியவாறு பயன்படுத்தி இருக்கின்றேன். அதுபோல் வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் அனைவரும் இம்முறை ஓர் அணியாக நின்று இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தை ஆதரிக்க வேண்டும்.

அடுத்த ஐந்து வருடத்தில் இந்த வடக்கு கிழக்கை தமிழரசுக் கட்சியை சேர்ந்த நாங்கள் பொறுப்பு எடுத்து மக்கள் அனைவருக்கும் ஒரு சிறந்த எதிர்காலத்தை அமைத்து தருவதற்கு மக்கள் அளிக்கும் வாக்காகவே அமையும்.

குறிப்பாகநாட்டின்அரசாங்கம்ஜனாதிபதியினுடைய பிரதானகட்சிக்குபெரும்பான்மையைஇந்ததேர்தலில் வருவது சந்தேகமாக உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் தமிழ்பேசும்தரப்பின்சார்பிலேபேரபேசும்சக்தியாக நாங்கள் இருக்கக்கூடிய ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

இந்த வாய்ப்பை நமது மக்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்த ஐந்து வருடத்தில் நாங்கள் இந்த மக்களுக்கான சிறந்த எதிர் எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்போம் அதற்காக உழைக்கக்கூடிய நபர்களை நாம் எமது கட்சி சார்பில் களம் இறக்கி உள்ளோம்.

தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு இந்த நாட்டில் நடந்த சமூக விரோத செயல்கள், இனப்படுகொலை, போன்றவற்றுக்கான விசாரணைகள் நீதி கிடைக்க வேண்டும், நில அபகரிப்பு, அரசாங்கத்தால் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணல் வடக்கு கிழக்கிலே அபிவிருத்தி நீதிமன்றை உருவாக்குதல் போன்ற பல விடயங்களை முன்னுறுத்தி நாங்கள் பேரம் பேசும் சக்தியாக எமது உடைய மக்கள் எங்களுடைய கரங்களை பயன்படுத்தினால் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கும் வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கும் சிறந்த ஓர் எதிர்காலத்தை எம்மால் அமைத்து தர முடியும்.

சரியான நபர்களை தேர்வு செய்யக்கூடிய வாய்ப்பு கிடைக்கும்போது மக்களுக்கு சரியான விடயங்களை அமைத்து தருவதற்கு நான் உழைப்பேன் என அவர் இதன்போது தெரிவித்தார்.(05)

# அரசியலில் சந்தித்த இழப்புக்களைவிட மக்களின் முடிவுகளே பெரும் வேதனை

## சரத் பொன்சேக்கா தெரிவிப்பு



தேர்தல் காலங்களில் அலையின் பின்னால் செல்வதால்தான் மக்களால் சரியான தீர்மானங்களை எடுக்க முடியாதுள்ளது. இவ்வாறான தீர்மானங்களால் ஒருபோதும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

அரசியலில் சந்தித்த இழப்புக்கள் எனக்கு கவலையளிக்கவில்லை. ஆனால் மக்களால் இன்னும் சரியான தீர்மானங்களை எடுக்க முடியவில்லை என்பதேகவலையளிப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா தெரிவித்தார்.

வியாழக்கிழமை வாக்களித்தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நான் அரசியலிலிருந்து ஓய்வு பெறவில்லை. சற்று ஓரமாகியிருக்கின்றேன். திசைக்காட்டியின் அலையில் சிக்கி அவர்களுக்கு புள்ளடியிடும் நிலைப்பாட்டிலேயே மக்கள் இருக்கின்றனர். தவறிழைத்தவர்களை ஓரங்கட்டி, எஞ்சியுள்ளவர்களுக்கு வாக்களிக்கும் நிலைப்பாடு தவறானதாகும்.

எஞ்சியிருப்பவர்களின் யார் தகுதியானவர் என்பதை சிந்தித்து வாக்களிக்க வேண்டும். இந்த நிலைப்பாட்டிலிருந்து வெளிவருவதற்கு மக்கள் இன்னும்யதார்த்தத்தைப்புரிந்துகொள்ளவில்லை. இனிவரும் காலங்களில் மக்களுக்கு அந்த யதார்த் தத்தை உணர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அலையின் பின்னால் செல்வதால் தான் மக்களால் சரியான தீர்மானங்களை எடுக்க முடியாதுள்ளது. இவ்வாறான தீர்மானங்களால் ஒருபோதும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

முன்னாள் இராணுவ தளபதியாக எனக்கு வழங்கப்பட்டுள்ளபாதுகாப்பினைக்குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் எனது தெளிவுபடுத்தலையடுத்து அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

மக்களுக்கு அவர்களின் விருப்பத்துக்கேற்ப தீர்மானம் எடுப்பதற்கான உரிமை இருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர் என்பதற்காக அவர்களின் பின்னால் செல்ல வேண்டிய தேவை எமக்கில்லை.

நான் இதற்கு முன்னர் அவ்வாறு செயற்பட்டதும் இல்லை. சரியானவர்களை மக்கள் தெரிவு செய்வார்களானால் பாராளுமன்றத்தை தூய்மைப்படுத்த வேண்டிய தேவை ஏற்படாது.

அதேவேளை அரசியல் அனுபவம் மிக்கவர்களே பாராளுமன்றத்துக்குச் செல்ல வேண்டும். பிரதேசசபையில் கூட அங்கத்துவம் வகிக்காதவர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டால், நிச்சயம் அது தோல்வியிலேயே நிறைவடையும்.

அரசியலில் சந்தித்த இழப்புக்களுக்காக நான் கவலையடைவில்லை. ஆனால் மக்களால் இன்னும் சரியான தீர்மானங்களை எடுக்க முடியவில்லை என்பதை எண்ணியே கவலையடைகின்றேன். – என்றார். (05)

# மசாஜ் நிலையத்திற்குள் சென்ற கொள்ளையர்களுக்கு நேர்ந்த கதி

மினுவாங்கொடை பிரதேசத்தில் உள்ள மசாஜ் நிலையம் ஒன்றிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற நான்கு கொள்ளையர்களுக்கும் மசாஜ் நிலையத்தில் இருந்த ஏனைய நபர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் மூவர் காயமடைந்துள்ளனர் என மினுவாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் கொள்ளையர்கள் இருவரும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த கொள்ளையர்கள் இருவரும் கம்பஹா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்; என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், கொள்ளையர்களால் தாக்கப்பட்டுக்காயமடைந்தநபரொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

ஏனைய கொள்ளையர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் களுஅக்கல மற்றும் மல்வானை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 28 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மினுவாங்கொடை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# வாக்குச்சீட்டை கிழித்த ஒருவர் காலியில் கைது

காலி, அக்மீமன பிரதேசத்தில் உள்ள வாக்கெடுப்பு நிலையம் ஒன்றில் வாக்குச்சீட்டை கிழித்ததாக கூறப்படும் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அக்மீமன பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் அக்மீமன பிரதேசத்தில் வசிக்கும் 48 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக அக்மீமன பிரதேசத்தில் உள்ள வாக்கெடுப்பு நிலையம் ஒன்றிற்கு சென்றுள்ளார்.

இதன்போது, வாக்கெடுப்பு நிலையத்தில் இருந்த அதிகாரிகள் சந்தேக நபரிடம் கையடக்கத் தொலைபேசியை உள்ளே எடுத்துச் செல்ல முடியாது என கூறியுள்ளனர்.

இதனால் கோபமடைந்த சந்தேக நபர் தனது வாக்குச்சீட்டை கிழித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்மீமன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# தம்பனை தேர்தல் வாக்களிப்பு நிலையத்திற்கு கோடாரியுடன் வந்த வேடுவ சமூகத் தலைவர்

## அனுமதி மறுப்பு

தம்பனை வேடுவ சமூகத்தின் பிரதிதலைவரும் குடும்பத்தினரும் வாக்களிப்பு நிலையத்திற்கு கோடாரியுடன் வந்ததால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

தம்பனையில் உள்ள வேடுவ சமூகத்தின் பிரதிதலைவர் கன்பண்டிய எத்தோவும் அவரது குடும்பத்தினரும் தேர்தல்வாக்களிப்பு நிலையத்திற்குள் கோடாரியுடன்நுழைந்துள்ளனர்.

எனினும் அவரது தோளில் கோடரியை அவதானித்த அதிகாரிகள் அவருக்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள தம்பனை வேடுவ சமூகத்தி;ன் பிரதிதலைவர் வேடுவ சமூகத்தின் கலாசாரம் மற்றும் உரிமைகள் பற்றி அறியாத அதிகாரிகளை அரசாங்கம் தம்பனையில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தக்கூடாது என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெளிநாடுகளிற்கும் நீதிமன்றங்களிற்கும் கோடாரியுடன் செல்வதற்கு எங்களிற்கு அனுமதி வழங்கியுள்ளனர் வாக்களிப்புநிலையங்களிற்குள் செல்வதற்கு எந்த தடையும் இருக்ககூடாது என அவர் தெரிவித்துள்ளார்.(05)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேசியத்தைக் கைகழுவினரா வடக்கு வாழ் தமிழ் மக்கள்?

2024 பொதுத் தேர்தல் முடிவுகள் தேசிய மக்கள் சக்தியை நோக்கிய மக்கள் அலையைத் தெளிவாக வெளிக்காட்டியுள்ளன. அந்தக் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மைஆசனங்களைஇலகுவாகக்கைப்பற்றும் நிலை தெளிவாகத் தெரிகின்றது. நாடாளுமன்றத்தில் பலமான ஓர் எதிர்க்கட்சி அமையவதற்கான வாய்ப்புக்கள் வெகு அரிதாகவே தெரிகின்றன.

இந்த பொருளாதார நெருக்கடி நிறைந்த, சவாலான காலத்தில் மக்கள் இப்படி ஒட்டுமொத்தமாக அத்தனை பொறுப்புக்களையும் தேசிய மக்கள் சக்தியிடம் தூக்கி ஒப்படைத்திருப்பது அதன் பொறுப்புக்களை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்கும் அதேவேளை, இலஞ்சம் ஊழல் அற்ற ஆட்சியையும் வழங்கி மாற்றத்தை மக்கள் உணரச் செய்வதற்கான பெரும் பொறுப்பை ஏற்றிருக்கும் தேசிய மக்கள் சக்தி அதனை நிறைவேற்றவேண்டிய மிகப் பெரும் கடமையைக் கொண்டுள்ளது.

மக்கள் விரும்பிய மாற்றத்தை முழுமையாகச் செயற்படுத்துவதற்கான அனைத்து அதிகாரங்களையும் தேசிய மக்கள் சக்தியின் கைகளில் மக்கள் ஒப்படைத்திருக்கிறார்கள். இனிக் காரணங்கள் சொல்லி மாற்றத்தைத் தட்டிக்கழிக்க முடியாது.

வழக்கத்திற்கு மாறாக இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என அனைத்து மக்களும் இந்த மாற்றத்துக்கான மிகப் பெரும் பொறுப்பை இணைந்து தேசிய மக்கள் சக்தியின் தலையில் சுமத்தியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு இலங்கையைப் புதிய பாதையில் வழிநடத்திச் செல்லவேண்டிய தேவையும் அவசியமும் தேசிய மக்கள் சக்திக்கு இருக்கின்றது.

இந்தத் தேர்தலில் வடக்குத் தமிழ் மக்கள் எடுத்திருக்கக்கூடிய மாற்றத்துக்கான முடிவு ஒட்டுமொத்த இலங்கையையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கின்றது என்பது –மிக வெளிப்படையாகவே தெரிகின்றது. இந்த மாற்றம் தமிழ் மக்கள் தமது விடுதலை வேட்கையையும் வேணவாவையும் கைவிட்டதற்கான அறிகுறியா, தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தின் பால் நின்று விலகிவிட்டார்களா என்கிற கேள்விகளை எழுப்புகின்றது. ஆனால் இந்த முடிவுகளை தமிழ் மக்களின் தமிழ்த் தேசிய விலகல் என்று கொள்ளத் தேவையில்லை. அவர்கள் தமக்கான தீரவுக்காக, விடுதலைக்காக ஒரு வாய்ப்பை இலங்கையின் மாற்றத்துக்கான சக்திகளுக்கு வழங்கியி–ருக்கின்றார்கள்.

வரலாறு முழுவதும் தமிழர்கள் இத்தகைய சந்தர்ப்பங்களை சிங்களக் கட்சிகளுக்கு வழங்கியே வந்திருக்கின்றார்கள். ஜி.ஜி.பொன்னம்பலம், தந்தை செல்வா முதற்கொண்டு காலத்திற்குக் காலம் இந்த வாய்ப்பு வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால் அந்த வாய்ப்புக்களை சிங்களத் தலைமைகள் பாழடித்து வீணாக்கியபோது அவர்கள் மீண்டும் வீறுகொண்டு தமது விடுதலை வேட்கையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். சீறி எழுந்து தமது போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியிருக்கிறார்கள். இப்போது தேசிய மக்கள் சக்திக்கு அவர்கள் வழங்கியிருப்பதும் அவ்வாறான ஒரு வாய்ப்பே. அதனைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டால் இலங்கையில் நிரந்தர அமைதி திரும்பும். இல்லையேல் தமிழர்களின் போராட்டம் இன்னும் வீரியமாக வீறு கொண்டெழும்.

# திருகோணமலையிலும் சுமுகமான வாக்களிப்பு



இலங்கையின் 10 ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நேற்று (வியாழக்கிழமை) காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகியது.

திருகோணமலை மாவட்டத்தில் பொது மக்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களித்தனர்.

திருகோணமலையில்வாக்களிப்பு சுமுகமான முறையில் நடைபெற்று வருகின்றது.(05)

# அம்பாறையில் சுமுகமாக நடைபெற்ற வாக்களிப்பு



நாடு பூராகவும் நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பானது காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது. வாக்களிப்பானது மிகவும் சுமுகமான முறையில் இடம் பெறுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அந்தவகையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரும் திகாமடுல்ல தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான சிந்திக அபேவிக்ரம தற்சமயம் ஊடக சந்திப்பில் பின்வருமாறு கருத்து தெரிவித்தார்.

நேற்று காலை 7.00 மணி முதல் 12.30 வரையிலான அம்பாறை மாவட்டத்தில் வாக்குப்பதிவுகளின் நிலைவரப்படி 25 சதவீதமான வாக்குப்பதிவுகள் நிறைவுபெற்றுள்ளன என மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை சம்மாந்துறை மற்றும் பொத்துவில் அம்பாறை ஆகிய தேர்தல் தொகுதிகளில் சுமார் 528 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் வாக்காளர்களின் எண்ணிக்கை 555,432 ஆகும். மற்றும் தெரிவு செய்யப்படவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 07 ஆகும்.மொத்தமாக 64 அரசியல் கட்சி உட்பட சுயேச்சைக்குழுக்கள் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காக போட்டியிட்டன.

2024 ஆண்டு பொதுத்தேர்தல் அறிவித்த பின்னர் அம்பாறை மாவட்டத்தில் வன்முறையற்றறும் அமைதியானதுமான தேர்தல் செயற்பாடுகள் நடைபெற்று கொண்டு வருகின்றது. பெரியளவிலான வன்முறைகள் எவையும் இடம் பெறவில்லை. எனினும் சிறு சம்பவங்கள் தேர்தல் கண்காணிப்பு ஊடாக கிடைக்கப்பெற்றிருந்தன. அவற்றுக்கான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.



வன்முறையற்ற நீதியான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவும் தெரிவத்தாட்சி அலுவலருமான நானும் பொதுமக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம் என குறிப்பிட்டார்.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் ஆங்காங்கே மழை பெய்து வருவதனால் பொதுமக்கள் வாக்களிப்பதில் நாட்டமின்றி காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.வாக்களிப்பு சுமுகமான முறையில் இடம்பெற்றுவருவதுடன், தேர்தல் கடமைகளில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஈடுபட்டுவருகின்றமையை அவதானிக்க முடிகிறது.(05)

# தேர்தல் சட்ட விதிமீறல்கள் மட்டக்களப்பில் 357 பதிவு

## மாவட்ட அரச அதிபர் தகவல்



மட்டக்களப்பில் 357 தேர்தல் சட்ட விதிமீறல்கள் பதிவாகியுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகருமான ஜஸ்டினா முரளிதரன் நேற்று நண்பகல் 12 மணியளவில் இந்து கல்லூரி வாக்கெண்ணும் நிலையத்தில் நடத்திய ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்றைய தினம் காலை 7 மணி முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமுகமான முறையில் நடைபெற்றன எனவும், நேற்று முற்பகல் 11.55 மணி வரை கல்குடா தொகுதியில் 28.65 வீதமும், மட்டக்களப்பு தொகுதியில் 30.05 வீதமும், பட்டிருப்பு தொகுதியில் 27.65 வீதமுமாக மொத்தமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 29.29 வீதமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்குகள் 12 மணியளவில் அளிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எந்தவொரு தேர்தல் வன்முறைசம்பவங்களும் இதுவரை பதிவாகவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது வரை 357 தேர்தல் சட்ட விதிமீறல்கள் பதிவாகியுள்ளன.

நேற்றைய தினத்தில் மாத்திரம் 84 தேர்தல் சட்ட விதிமீறல்கள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்தார். (05)

### வயோதிபப் பெண்ணின் வாக்குக்கு

# புள்ளடியிடுவதில் மோசடி செய்த அரச அலுவலர் கடமை நீக்கம்

## வாக்களிக்க உதவி கோரிய வயோதிபப் பெண்: தெரிவித்த சின்னத்துக்குப் பதிலாக வேறொரு சின்னத்துக்கு புள்ளடியிட்டவர் பணி நீக்கம்

வாக்குச்சாவடியில் வாக்களிக்கச் சென்ற வயோதிபப் பெண், அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரிடம் சின்னமொன்றை கூறி, அதில் புள்ளடியிட்டு உதவிசெய்யுமாறு கேட்க, அப்பெண் கூறிய சின்னத்துக்கு பதிலாக வேறொரு சின்னத்துக்கு புள்ளடியிட்டுக் கொடுத்த உத்தியோகத்தர் உடனடியாக கடமையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு காத்தான்குடி ஹிஸ்புலா பாலர் பாடசாலை வாக்குச்சாவடியில் கடமையாற்றிய உத்தியோகத்தரே பணியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றநிலையில், மட்டக்களப்புமாவட்டத்தின்காத்தான்குடி வாக்குச்சாவடியில் வாக்குப் பதிவின்போது வயோதிபப் பெண்ணுக்கு உதவி செய்ய முன்வந்த உத்தியோத்தர், தவறான சின்னத்தில் புள்ளடியிட்டுக் கொடுத்த காரணத்தால் உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என தேர்தல் உதவி ஆணையாளர் எம்.பி.எம். சுபியான் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இந்த வாக்குச்சாவடியில் வயோதிபப் பெண்ணொருவர் வாக்களிப்பதற்கு உதவி கோர, அவருக்கு உதவி செய்யுமாறு அங்கு கடமையாற்றிவரும் உத்தியோகத்தர் ஒருவரை வாக்குசாவடிக்கு பொறுப்பான தேர்தல் பொறுப்பதிகாரி பணித்துள்ளார்.

அதன்பின்னர், அந்தப்பெண் ஒரு சின்னத்தை தெரிவித்து, அதற்கு புள்ளடியிடுமாறு உத்தியோகத்தரிடம் தெரிவித்தார்.

அதனையடுத்து, அந்த உத்தியோகத்தர் பெண் கூறாத வேறொரு சின்னத்துக்கு புள்ளடியிட்டு வாக்குச்சீட்டை மடித்து பெண்ணிடம் வழங்கியுள்ளார்.

அவர் அந்த வாக்குச்சீட்டை விரித்துப் பார்த்து, தான் தெரிவித்த சின்னத்துக்கு புள்ளடியிட்டுள்ளாரா என பார்த்தபோது வேறொரு சின்னத்துக்கு புள்ளடியிடப்பட்டுள்ளமை தெரியவர, அங்கு பெருங்குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, அந்த வாக்குச்சாவடிக்கு மாவட்ட தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் சென்று உடனடியாக அந்த உத்தியோகத்தரை கடமையில் இருந்து நீக்கி, அவரை தேர்தல் திணைக்களத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் சென்றதுடன், மீண்டும் ஏற்பாடு செய்யப்பட்டு உரிய முறையில் அப்பெண்ணின் வாக்கு பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். (05)

# 6 தேர்தல் விதி மீறல்கள் மன்னாரில் நேற்று பதிவு



மன்னார் மாவட்டத்தில் நேற்றைய தேர்தல் வாக்குப் பதிவுகளின் போது 6 தேர்தல் விதி மீறல் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்ட தேர்தல் நிலைவரத்தைப் பொறுத்த வரையில் காலை 7 மணி தொடக்கம் 10 மணி வரையான நிலைவரப்படி 98 வாக்களிப்பு நிலையங்களில் 21,784 வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இது மொத்த வாக்களிப்பில் 24 வீதமாகும்.

அதேநேரம் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து நேற்று வரை மன்னார் மாவட்டத்தில் 26 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் அதில் நேற்று 6 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவை சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(05)



# நாடாளுமன்ற உயர் அதிகாரியுடன் வெளிநாட்டு ராஜதந்திரிகள் சந்திப்பு



வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்து - பசுபிக் பிராந்திய அபிவிருத்தியின் சிரேஷ்ட நிர்வாக ஆலோசகர் கலாநிதி பென் போவிஸ் மற்றும் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் பிரிவின் தலைவர் டொம் சோப்பர் ஆகியோர் நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவை சந்தித்தனர்.

இச் சந்திப்பில் நாடாளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்னவும் கலந்துகொண்டார்.

பிரித்தானிய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் ஜனநாயகத்திற்கான வெஸ்மினிஸ்டர் மன்றம் இலங்கை நாடாளுமன்றத்துடன் நெருக்கமாக ஆற்றிவரும் பங்களிப்பை நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன பாராட்டினார்.

இவ்வாறு வழங்கப்பட்ட உதவிகள் நாடாளு மன்றத்தை ஒரு நிறுவனமாக மேலும் வலுப்ப டுத்துவதை சாத்தியமாக்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்திலும் இதே ஆதரவை எதிர் பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

9 ஆவது நாடாளுமன்றத்தின் சட்டவாக்கச் சிறப்புக்கள் மற்றும் 10 ஆவது நாடாளுமன்றத்தின் நிலைமாறும் சூழல் குறித்த விடயங்களை கலாநிதி பென் போவிஸ் கேட்டறிந்துகொண்டார்.

பதில் செயலாளர் நாயகம் மற்றும் உதவி செயலாளர் நாயகம் ஆகியோர் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குறிப்பிடத்தக்க சட்டங்கள் பற்றி சுருக்கமாக விளக்கமளித்ததுடன், நாடாளுமன்றத்தின் குழு முறைமைகள் பற்றி விரிவான விளக்கத்தை வழங்கினர்.

துறைசார் மேற்பார்வைக் குழு பொறிமுறையில் இளைஞர் பிரதிநிதித்துவத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அவர்கள் மேலும் விளக்கமளித்தனர்.

நாடாளுமன்ற வரவுசெலவுத்திட்ட அலுவலகத்தை அமைப்பது, சட்டம் இயற்றப்பட்ட பின்னர் அவற்றை மதிப்பீடு செய்வதற்காக ஆய்வுக்குழுவொன்றை



ஸ்தாபிப்பது தொடர்பான வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன எனவும் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

மேலும், 10 ஆவது நாடாளுமன்றத்திற்குத் தேவையான எதிர்கால உதவிகள் மற்றும் ஒத்துழைப்புகள் தொடர்பான விவரங்களை இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

இலங்கை நாடாளுமன்றத்திற்கு வழங்கக் கிடைத்த ஒத்துழைப்புத் தொடர்பில் தாம் மகிழ்ச் சியடைவதாகவும், நாடாளுமன்றத்தின் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதில் தாம் தொடர்ந்தும் நம்பிக்கை கொள்வதாகவும் கலாநிதி பென் போவிஸ் மற்றும் டொம் சோப்பர் ஆகியோர் தெரிவித்தனர். இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து இவர்கள் நாடாளுமன்றத்தையும் பார்வையிட்டனர்.(05)

# காலிச் சிறைக் கைதி ஒருவர் தப்பியோட்டம்

காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்துதப்பிச்சென்றுள்ளார் என காலி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

காலி, அக்மீமன பிரதேசத்தைச் சேர்ந்த கைதி ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இந்த கைதி சிறைச்சாலையின் சமையல் அறையில் உணவுகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்துதப்பிச்சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# மட்டக்களப்பில் அமைதியான முறையில் நடந்த வாக்களிப்பு





இலங்கையின் 10 ஆவது நாடாளுமன்ற பொதுத் தேர்தல் திட்டமிட்டதன் அடிப்படையில் நேற்று வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் வாக்களிப்புகள் மிகவும் சுமுகமான முறையில் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

மக்கள் தமக்குரிய பிரதிநிதிகளைத் தேர்வு செய்வதற்காக ஆர்வத்துடன் வாக்களிப்பில் கலந்து கொண்டு வருவதையும் காணமுடிகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலுக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 23 அரசியல் கட்சிகளும், 33 சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 56 வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப் பட்டிருந்தன.

அதில் 22 அரசியல் கட்சிகளினதும், 27 சுயேச்சைக் குழுக்களினதுமாக மொத்தம் 49 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 5 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்காக இம்முறை 392 பேர் மட்டக் களப்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர்.

ஓர் அரசியல் கட்சியினதும், 6 சுயேசை குழுக்களினதுமாக மொத்தம் 7 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தபால் மூலமாக வாக்களிப்பிற்காக மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 14,222 பேர் விண்ணப்பித்திருந்தனர். எனினும் 14,003 பேருடைய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தாக, மட்டக்களப்பு உதவித் தேர்தல் ஆணையாளர் எம்.பி.எம். சுபியான் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 449,686 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அதில் கல்குடா தொகுதியிலிருந்து 134,104 பேரும், மட்டக்களப்புத் தொகுதியிலிருந்து 210,293 பேரும், பட்டிருப்புத் தொகுதியிலிருந்து 105,289 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளளர்.

இம்மாவட்டத்தில் 442 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் கல்குடா தொகுதியில் 123 வாக்களிப்பு நிலையங்களும், மட்டக்களப்பு தொகுதியில் 197 வாக்களிப்பு நிலையங்களும், பட்டிருப்புத் தொகுதியில் 122 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்புக்கள் பிற்பகல் 4 மணியுடன் நிறைவு பெற்றதும், வாக்கெண்ணும் நிலையமாகவுள்ள, மட்டக்களப்பு இந்துக்கல்லூரிக்கு பொலிஸ் பாதுகாப்பிற்கு மத்தியில் வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப் பட்டன. அங்கு 46 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் 37 சாதாரண வாக்கெண்ணும் நிலையங்களும், 9 தபால்மூல வாக்கெண்ணும் நிலையங்களுமாக அமைந்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 218 தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பாரிய வன்முறை சம்பவங்கள் எதுவும் மாவட்டத்தில் பதியப்படவில்லை.

இந்நிலையில் முப்படையினரும் மாவட்டத்தின் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளதோடு, தேர்தல் கடமை களுக்காக 6,750 அரச உத்தியோகஸ்த்தர்களும், 1900 பொலிஸார் உள்ளிட்ட விசேட அதிரடிப்படையினரும், 300 இற்கும் மேற்பட்ட வாகனங்களும், கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளன.

இதேவேளை தேர்தல் கண்காணிப்புக்களுக்காக உள்நாட்டு, வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு உதவித் தேர்தல் ஆணையாளர் எம்.பி.எம். சுபியான் மேலும் தெரிவித்தார். (05)

# கிளிநொச்சியில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பு



இலங்கை நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு நாடளாவிய ரீதியில் நேற்று (வியாழக் கிழமை) காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி 4 மணிவரை நடைபெற்றது.

அந்தவகையில், கிளிநொச்சி மாவட்டத்திலும் வாக்காளர்கள் காலை 7.00 மணி தொடக்கம் தமது ஜனநாயக கடமையை ஆர்வத்துடன் நிறைவேற்றி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 108 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், இம்முறை 100,907 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வாக்களிப்பு சுமுகமான முறையில் இடம்பெற்று வருவதுடன், தேர்தல் கடமைகளில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஈடுபட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகிறது.

இத்தேர்தல் பணியில் கிளிநொச்சி மாவட்டத்தில் 1,863 அரச உத்தியோகத்தர்கள், 396 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இத்தேர்தல் பணியில் கிளிநொச்சி மாவட்டத்தில் 1,863 அரச உத்தியோகத்தர்கள், 396 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
(05)

# குடாநாட்டில் சுமுகமாக நடைபெற்ற வாக்களிப்பு

பத்தாவது நாடாளுமன்றத்திற்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் வாக்களிப்பு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று காலை 7 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரையில் வாக்களிப்பு நடவடிக்கைகள் நடைபெற்றன.

(05)

# குருநகர் தேவாலயம் மீது குண்டுவீசப்பட்ட நினைவு

## 31ஆவது ஆண்டாக நிகழ்வு



குருநகர் புனித யாகப்பர் ஆலயம் 1993 ஆம் ஆண்டு அரச பயங்கரவாதத்தினால் குண்டு வீசப்பட்டு சிதைக்கப்பட்டதன் 31 ஆவது ஆண்டு நினைவு தினம் புதன்கிழமை நினைவு கூரப்பட்டது.

பங்குத்தந்தை அருட்பணி யாவிஸ் அடிகளார் தலைமையில் ஆலயத்தில் காலைத் திருப்பலியின் நிறைவில் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

நினைவுத் திருப்பலியை மண்ணின் மைந்தன் அருட்பணி கை. கனிசியஸ் ராஜ் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். (05)



# வவுனியா நகரம் எங்கும் வீசப்பட்ட கட்சி சின்னம் பொறித்த துண்டுகள்

பொதுத்தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றுவரும் நிலையில் வவுனியா நகரப்பகுதிகளில் வேட்பாளரின் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளமை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக நகரத்திற்கு அண்மையில் அமைக்கப் பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களிலிற்கு அருகில் இவ்வாறான வேட்பாளர்களின் கட்சி சின்னம் பொறிக்கப்பட்ட அட்டைகள், துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளன.

அவற்றைதுரிதமாகஅகற்றிளிக்கும்செயற்பாடுகளில் பொலிஸார் ஈடுபட்டனர். (05)

# முல்லை. மாவட்டத்திலும் அமைதியாக வாக்களிப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்காளர்கள் வாக்களிப்பதற்குரிய 137 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்களிக்க தகுதிபெற்ற 86,869 பேர் நேற்று வாக்களிக்க இருந்தனர்.

அத்தோடு இந்த தேர்தல் பணிக்காக சுமார் 1,500 மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள், 500 பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஈடுபட்டிருக்கின்றமையுடன் தேர்தல் கடமையில் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஈடுபட்டு சந்தமையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. (05)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்யும் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்களிப்பு அமைதியான முறையில் நடைபெற்றது.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான வாக்கு பதிவுகள் நேற்;று காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய நிலையில் மக்கள் உற்சாகமாக புதிய தலைவர்களை தெரிவு செய்ய அமைதியான முறையில் முல்லைத்தீவு மாவட்ட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களித்தனர்.





## நாணய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

4 இலங்கைக்கு வருகை தந்து பல்வேறு சந்திப்புகளை நடத்தியிருந்தது.

இந்தக் கலந்துரையாடல்களின் பின்னர் வொஷிங்டனில் நடத்திய ஊடகச் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட கிருஷ்ணா சீனிவாசன், மூன்றாம் கட்ட மதிப்பாய்வுக்காக விரைவில் இலங்கை வரவுள்ளார் என்று கூறியிருந்தார்.

## காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com

# ஊடகவியலாளர் சதீஸ்குமார் மீது பொகவந்தலாவையில் தாக்குதல்

2024ஆம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தல் தொடர்பில் ஊடகங்களுக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற பொகவந்தலாவை பிரதேச பிராந்திய ஊடகவியலாளர் எஸ்.சதீஸ்குமார் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் காயமடைந்து நேற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தமிழ் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பலவற்றின் பிராந்திய செய்தியாளராகப் பணியாற்றி வருகின்றார் பொகவந்தலாவை எஸ்.சதீஸ்குமார். கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் தலையில் பலத்த காயங்களுக்குள்ளாகிய அவர், பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இலக்கம் 2 தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்தவாக்களிப்புநிலையத்திற்கு அருகில் நேற்றுப் பிற்பகல் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும், நபர் ஒருவர் தனக்குப் பின்னால் வந்து அருகில் கடையொன்றில் இருந்து கத்தியை எடுத்து தனது தலையில் தாக்கினார் என்றும் சதீஸ்குமார் தெரிவித்தார். மேலும், சம்மந்தப்பட்ட சந்தேக நபர் மதுபோதையில் இருந்தார் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பொகவந்தலாவை பொலிஸில் முறைப்பாடு செய்ததாகவும் ஊடகவியலாளர் சதீஸ்குமார் மேலும் தெரிவித்துள்ள நிலையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

-பொகவந்தலாவை கெக்கர்ஸ்வோல்ட்







# மன்னாரில் வாக்காளர்களுக்கு என வழங்க கொண்டுவரப்பட்ட உணவு பொதிகள் மீட்பு

## பொலிஸாரால் 3 நபர்கள் கைது



மன்னாரில் வாக்காளர்களுக்கு அரசியல் கட்சி ஒன்றால் வழங்குவதற்கு என கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி உலர் உணவு பொருள்கள் புதன்கிழமை மாலை மன்னார்-யாழ் பிரதான வீதியில் வைத்து அடம்பன் பொலிஸாரால் வாகனம் ஒன்றில் வைத்து மீட்கப்பட்டுள்ளதோடு மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மன்னார்-யாழ் பிரதான வீதியில் வைத்து வாகனம் ஒன்றை சோதனை செய்த போது குறித்த வாகனத்தில் ஒரு தொகுதி உலர் உணவுப் பொருள்கள் காணப்பட்டன.

இதன் போது பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் போது குறித்த உலர் உணவுப் பொருள்கள்அரசியல்கட்சிஒன்றால்வாக்காளர்களுக்கு வழங்க கொண்டு வரப்பட்டமை தெரியவந்தது.

இந்த நிலையில் குறித்த பொருள்களை பொலிஸார் அடம்பன் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றதோடு,குறித்த வாகனத்தின் சாரதி,உதவியாளர் உள்ளடங்களாக வாகனத்தில் பயணித்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த வாகனத்தில் சுமார் 290 நபர்களுக்கு வழங்கக்கூடிய வகையில் தயார் செய்யப்பட்ட 5 கிலோ அரிசி பக்கெட், 2 கிலோ மா, ஒரு கிலோ சீனி, 20 கிராம் ரிங்சோ பக்கட் 5 வீதம் தயார் செய்யப்பட்ட கொண்டு வரப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பொருள்கள் 6 லட்சத்து 13 ஆயிரத்து 500 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டமை தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் அடம்பன் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களையும்,மீட்கப்பட்ட பொருள்களையும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளனர்.(05)

## விவசாயம், கல்வி, சுற்றுலா அரச சேவை மேம்பாட்டுக்கு

# தொழில்நுட்ப, நிதி உதவிகளை தர நெதர்லாந்து ஆளும்தரப்பு ஆர்வம்



இந்நாட்டில் விவசாயம், கல்வி, சுற்றுலா மற்றும் பொதுச் சேவை மேம்பாட்டுக்கு தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் நிதி வசதிகளை வழங்க நெதர்லாந்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

நெதர்லாந்தின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் இவான் ருட்ஜென்ஸ் உள்ளிட்ட நெதர்லாந்து தூதுக்குழுவினர், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடினர்.

நெதர்லாந்தில் உள்ள வாகனிங்கன் பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் கடந்த 7 ஆண்டுகளாக உலக பல்கலைக்கழக தரவரிசையில் முதலிடத்தை பிடித்துள்ள நிலையான பல்கலைக்கழகமாக பெயரிடப்பட்டுள்ளது.

விவசாயம், விவசாயம்-சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் இலங்கையின் முக்கிய பங்குதாரர்களுடன் இணைந்து புதிய ஒத்துழைப்பு திட்டங்களை ஆரம்பிக்க மேற்படி பல்கலைக்கழகம் எதிர்பார்த்துள்ளது.

அதற்கான வாய்ப்புகள் மற்றும் சவால்களை அறிந்துகொண்டு, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி போன்ற பலதரப்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை ஒத்துழைப்புடன் விளைச்சல் மற்றும் நிலையான உணவுக் கட்டமைப்புக்கான திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்துகிறது.

இதன்படி, இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் இலங்கையுடன் நெருக்கமாகச் செயற்படுவதுடன் தொழில்நுட்ப மற்றும் நிதி வசதிகளை வழங்கவும் நெதர்லாந்து பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர்.

நெதர்லாந்து வகினின்கன் பல்கலைக்கழக ஆய்வு பீடத்தின் தலைவர் பேராசிரியர் வில்பர்ட் டொல்ப்ஸ்மா, வெகனிங்கன் பல்கலைக்கழக முகாமையாளர் கல்யான் சக்ரவர்த்தி , கலாசார ஆய்வுக் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் எட்வர்ட் ஹயின்ஜ்பென்ஸ்,,சொல்மிராய் நிறவன குழுமத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ரிகாடோ எப்டோல் மற்றும் ஷோமோ லபீசரன் ஆகியோருடன் ஜயவர்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் ரணில் டி சில்வா உள்ளிட்டவர்கள் இதன்போது கலந்துகொண்டிருந்தனர். (05)

# வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் இருந்தபோது பொலிஸ் அலுவலர் சாவு

## யாழ். உரும்பிராயில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த சுபாஷ் எனும் பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் புதன்கிழமை முதல்பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த நிலையில் நேற்று (வியாழக்கிழமை) காலை உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

அதனை அடுத்து சடலத்தை மீட்ட கோப்பாய் பொலிஸார் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்துள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த சம்பவத்தால் நேற்று காலை குறித்த வாக்களிப்பு நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டதுடன், பிறிதொரு பொலிஸ் உத்தியோகத்தர் கடமைக்கு அமர்த்தப்பட்டு, வாக்களிப்பு சுமுகமான முறையில் நடைபெற்றது. (05)

# போலி இலக்கத்தகட்டுடன் சொகுசு வாகனம் தங்காலையில் மீட்பு

## வர்த்தகர் கைது

தங்காலை, விதாரந்தெனிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலி இலக்கத்தகடு பொருத்தப்பட்ட சொகுசு வாகனம் ஒன்று மாத்தறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் செவ்வாய்க்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சொகுசு வாகனத்தின் உரிமையாளர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

எம்பிலிப்பிட்டிய, பல்லேகம பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே கைதுசெய்யப்பட்டவர் ஆவார்.

இந்த சொகுசு வாகனம் மூன்றரை கோடி ரூபா பெறுமதியானது என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சொகுசு வாகனம் களுத்துறை பிரதேசத்தில் உள்ள அரசியல்வாதி ஒருவரின் சகோதரர் மூலமாக குறித்த வர்த்தகருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர் (05)

# யாழில் வேட்பாளரின் தந்தை மீது தாக்குதல்



யாழ்ப்பாணத்தில் சுயேச்சையாக போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் தந்தைமீது தாக்குதல் நடதப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் போது காயங்களுக்குள்ளான நிலையில் வேட்பாளரின் தந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

கொழும்புத்துறை – நெளுக்குளம் பகுதியில் அமைந்துள்ள சுயேச்சைக் குழு வேட்பாளர் ஒருவரின் வீட்டிற்குள் செவ்வாய்க்கிழமை மாலை வன்முறைக் கும்பலொன்று அத்துமீறி உள்நுழைந்துள்ளது.

அங்கு வேட்பாளரின் தந்தையின் தலையில் இரும்பு கம்பியால் தாக்கிய அதேவேளை வீட்டின் ஜன்னல் கண்ணாடி மற்றும் மோட்டார் வாகனத்தின் மீதும் வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

மேலும் அயல் வீட்டின் மீதும் தாக்குதலை நடத்தி விட்டு தப்பி சென்றதுள்ளதுடன் குறித்த வீட்டில் வசிக்கும் இளைஞரின் கை மீதும் வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த விசேட அதிரடிப் படையினர் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# பௌத்த தேரரை மிரட்டிப் பணம் பறித்த இளைஞர்கள் பொலன்னறுவையில் கைது

பொலன்னறுவை, திம்புலாகல பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் பணிபுரியும் தேரர் ஒருவரை மிரட்டி 03 லட்சத்து 45 ஆயிரம் ரூபா பணம் பறித்த இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலன்னறுவை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் தெஹியத்தகண்டிய பிரதேசத்தில் வசிக்கும் 23 மற்றும் 29 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்கள் இருவரும் குறித்த விகாரைக்குச் சென்று அங்கு பணிபுரிந்த தேரரை தாக்கி நிர்வாணமாக்கி அதனை காணொளிகளாக எடுத்து சமூக ஊடகங்களில் பதிவிடுவதாகக் கூறி தேரரை மிரட்டி சுமார் ஒரு வருட காலமாக பணம் பறித்து வந்துள்ளனர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.


சந்தேக நபர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் , கையடக்கத் தொலைபேசி மற்றும் வங்கிக்கணக்கு புத்தகம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலன்னறுவை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# முல்லைத்தீவு வாக்குச் சாவடிகளுக்கு முன்பாக நேற்றும் அகற்றப்படாத தேர்தல் சின்னங்கள்

## பொலிஸார் நடவடிக்கை இல்லை என முறைப்பாடு





வாக்குச் சாவடிகளுக்கு முன்பாக நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சின்னம், இலக்கங்கள் பொறிக்கப்பட்டிருப்பதாக பொலிஸாருக்கு புதன்கிழமை முறைப்பாடு வழங்கியும் அதனை அகற்ற எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு, புதுக்குடியிருப்பு வாக்களிப்பு நிலையங்களுக்கு முன்பாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சின்னம், இலக்கங்கள் வீதிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. அதனை அகற்றுமாறு ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்காவினுடைய தேர்தல் கண்காணிப்பாளர்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டும் அகற்றப்படாமல் இருந்தது.

தொடர்ந்து நேற்றையதினம் காலை மீண்டும் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் தேர்தல் கண்காணிப்பாளர்களால் பொலிஸார் மற்றும் தேர்தல் திணைக்களத்திற்குத் தகவல் வழங்கப்பட்டிருந்ததன் பின்னர் குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸாரால் அடையாளங்கள் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஹோட்டலுக்கு சென்றவர்கள் மீது பண்டாரகமவில் திடீர் தாக்குதல்

## உரிமையாளர் உட்பட நால்வர் கைது

பண்டாரகம, பொல்கொட பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்குச் சென்றிருந்த நண்பர்கள் குழுவைத் தாக்கி காயப்படுத்தியதாகக் கூறப்படும் ஹோட்டல் உரிமையாளர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பண்டாரகம பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

அத்துருகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த நண்பர்கள் குழு ஒன்று பண்டாரகம, பொல்கொட பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தையும் அதனை சுற்றியுள்ள பகுதியையும் முன்பதிவு செய்து சுற்றுலாவுக்காக அங்கு சென்றுள்ளனர்.

இதன்போது, இந்த ஹோட்டலுக்கு சென்ற ஹோட்டல் உரிமையாளரின் உறவினர்கள் சிலர் நீச்சல் தடாகத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதியையும் தங்களுக்கு வழங்குமாறு ஹோட்டல் உரிமையாளரிடம் கூறியுள்ளனர்.

பின்னர் இந்த ஹோட்டல் உரிமையாளர் குறித்த நண்பர்கள் குழுவிடம் ஹோட்டலை விட்டு வெளியே செல்லுமாறு கூறியுள்ளார்.

இதனால் இரு தரப்பினர்களுக்கு இடையிலும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதுடன் ஹோட்டல் உரிமையாளரும் பணியாளர்கள் சிலரும் இணைந்து நண்பர்கள் குழுவைத் தாக்கியுள்ளனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.11.2024இல் வெளியிடப்பெற்றது